**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2014**

**P104 காப்பியங்களும் சங்க இலக்கியமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. எவ்வகைப் பாடல்கள் சங்க இலக்கியமாக மலர்ந்தன?
2. சிலம்பு காட்டும் நூற்பயன்கள் யாவை?
3. மணநூல் என்று எதற்குப் பெயர்?
4. பாரதியின் பெற்றோர் யாவர்?
5. வாணிதாசனின் 'பாரதிநாள்' எந்த ஏட்டில் வெளியானது?
6. முதற் சங்கத்தை நிறுவியவர் யார்?
7. சூளாமணியின் ஆசிரியர் யார்?
8. ஊடல் எந்தத் திணைக்குரியது?
9. வெட்சித் திணை எந்த அகத்திணைக்குப் புறமாக அமைந்தது?
10. ஆநிரை கவர்தல் எந்தத் திணை?

11. சோழன் கரிகால் பெருவளத்தானின் மனைவி பெயர் என்ன?
12. கலைஞர்கள் பலர் நடுவே நல்லியக்கோடன் எதைப் போல அமர்ந்திருப்பான்?
13. சங்க காலத் தமிழர் 'தீக்கடைக்கோலை' எப்பெயரால் குறித்தனர்?
14. ஒல்லையூர்ச் சாத்தன் இறந்தபோது குடவாயிற் கீரத்தனார் எதைப் பார்த்துப் புலம்பிக் கவிதை பாடினார்?
15. பெரியார் தலைமையில் பாரதிதாசன் அரங்கேற்றிய நாடகத்தின் பெயர் என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. தண்டியலங்காரம் கூறும் காப்பிய இலக்கணத்தை எழுதுக.
2. சிலம்பு உடைபட்டதும் பாண்டியன் நிலை குறித்து எழுதுக.
3. பெரிய புராணம் எழுந்த சூழலைச் சுட்டுக.
4. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் – சிறு குறிப்பு வரைக.
5. கடைச்சங்கம் – சிறு குறிப்பு வரைக.
6. முல்லைத்திணை என்றால் என்ன? விளக்குக.
7. புறநானூறு என்றால் என்ன?
8. பெருஞ்சேரல் இரும்பொறையின் பெருமைகள் யாவை?

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்களில் பாட்டாளி மக்களின் உழைக்கும் உணர்வுகள் அதிகம் காணப்படுவதை விளக்கிக் காட்டுக.

(அல்லது)

(ஆ) மாங்கனி காவியத்தின் கதையைச் சுருக்கி எழுதுக.

2. (அ) தமிழச்சி – கொடிமுல்லை என்ற இரு காப்பியங்களில் காதலின் பங்கு என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆற்றுப்படை இலக்கியம் வெளிப்படுத்தும் மனிதரின் தலைமைப்

பண்புகளைத் தொகுத்து எழுதுக.

3. (அ) குறிஞ்சி நில மக்களுக்கு உரிய வாழ்க்கை ஒழுக்கங்கள் பண்புகள் குறித்துக் கட்டுரை வடிவில் எழுதுக.

(அல்லது)

(ஆ) பாலைத் திணைப் பாடல்களில் கற்பனை, சொல்லாட்சி பெறும் இடங்களை விரிவாக விளக்குக.